செ.வெ.எண்: 42/பிப்ரவரி நாள்: 22.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**சுய தொழில் செய்து சமுதாயத்தில் தன்னம்பிக்கையுடன் தங்களது வாழ்க்கையில் முன்னேறும் விதமாக 6 மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதித்திட்டத்தின் கீழ் சுய தொழில் செய்ய நலத்திட்ட உதவிகளை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (22.02.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட தாட்கோ அலுவலகத்தின் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதித்திட்டத்தின் கீழ் 6 மாற்றுத்திறனாளிகளுக்கு சிறு தொழில் செய்ய தலா ரூபாய் 20 ஆயிரம் வீதம் மொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு தங்களது குறைகளை மனுக்களாக பூர்த்தி செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்கள். பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தினார். மேலும் இக்கூட்டத்தில் 2015-2016ஆம் ஆண்டு தாட்கோ செயல் திட்டத்தின் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதித் திட்டத்தின் கீழ், சுய தொழில் செய்து சமுதாயத்தில் தன்னம்பிக்கையுடன் தங்களது வாழ்க்கையில் முன்னேறும் விதமாக 6 மாற்றுத்திறனாளிகளுக்கு சிறு தொழில் செய்ய தலா ரூபாய் 20 ஆயிரம் வீதம் மொத்தம் ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட தாட்கோ மேலாளர் திரு.கே.செல்வராஜ் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**